**மாண்புமிகு சார்பு நீதிமன்றம், மானாமதுரை**
**O.S. No. 173/2022**

**வா.சா.1 – பாலாஜி** **04.06.2025**

**1, 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

நான் டிப்ளோமோ சிவில் இன்ஜினியரிங் படித்துள்ளேன். நான் 1978ம் வருடம் பிறந்தேன். இந்த வழக்கை நானும் எனது அம்மா மற்றும் சகோதர சகோதரிகள் சேர்ந்து தாக்கல் செய்துள்ளோம். 1ம் பிரதிவாதி எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்டை ரத்து செய்ய வேண்டுமென்று இந்த வழக்கில் பரிகாரம் கோரியுள்ளோம். 24.06.1982ல் எனது தகப்பனார் 1ம் பிரதிவாதியுடன் வெண்ணிலை கிரைய அக்ரிமெண்ட் ஏற்படுத்திக்கொண்ட விபரம் மற்றும் 16.08.1982ல் 1ம் பிரதிவாதி செல்ரசீது எழுதிக்கொடுத்த விபரமும் எனக்கு நேரடியாக தெரியாது. மேற்படி விபரம் எனது தகப்பனார் சொல்லி எனக்கு தெரியும். மேற்படி விபரம் எனக்கு 2015ல் எனது அப்பா சொன்னார். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விபரத்தை எனது அப்பா 2015ல் என்னிடம் கூறினார். எனது அப்பா எனது அம்மாவை திருமணம் செய்வதற்கு முன்பே கிராம நிர்வாக அலுவலராக பணிபுரிந்து வந்தார் என்றால் சரிதான். நான் பிறந்தது முதல் எனது அப்பா இறக்கும் வரை ஒரே குடும்பமாக தான் இருந்தோம் என்றால் சரிதான். எனது அப்பா 1ம் பிரதிவாதியிடம் கிரைய தொகை வாங்கிக்கொண்டு தாவா சொத்தை வாய்மொழியாக கிரையம் கொடுத்து சொத்தை ஒப்படைத்த விபரம் எனக்கு தெரியாது. அவ்வாறு வாய்மொழியாக கிரையம் கொடுத்துவிட்டு 1982ல் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் சம்மதம் தெரிவித்து தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா பெற்றுக்கொடுத்த விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தை எனது

அப்பா 1ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்த பின்பு 1ம் பிரதிவாதி பெயரில் நில உடைமை மேம்பாட்டு திட்டத்தில் பட்டா பதிவு ஏற்பட்ட பின்பு தாவா சொத்தை நானோ எனது குடும்பத்தினரோ ஒருபோதும் அனுபவம் செய்ததில்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தை 1, 2 பிரதிவாதிகள் தான் இன்று வரை அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 2011ம் வருடம் மோசடியாக தான செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்ததாக எனது தந்தை மாவட்ட ஆட்சியர் மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளரிடம் மனு கொடுத்த விபரம் எனக்கு தெரியும். என்னிடம் காட்டப்படும் வாசாஆ7 ஆவணத்தில் உள்ள கையொப்பம் எனது தந்தையின் கையொப்பம் தான். மேற்படி வா.சா.ஆ.7 ஆவணத்தை எனது தந்தை தனது கைப்பட தான் எழுதிக்கொடுத்துள்ளார். மேற்படி ஆவணத்தில் முன்பணம் 1500 போக பாக்கி கிரைய தொகை ரூ.760/– யை ஆடி மாதம் 15ம் தேதிக்குள் செலுத்திவிடவேண்டும் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் ரூ.190/– ரொக்கம் ரூ.300/– நெல் என எழுதி எனது தந்தை கையொப்பம் செய்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி தொகை முழுவதும் வாங்கிக் கொண்டு தான் எனது அப்பா 1ம் பிரதிவாதி பெயரில் தாவா சொத்திற்கு பட்டா மாற்றிக்கொடுத்தார் என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. நான் பிறந்த பின்பு தாவா சொத்தை நானும் எனது குடும்பத்தினரும் அனுபவம் செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது அப்பா 2010ம் வருடம் பணியிலிருந்து ஓய்வு பெற்றார். அதன்பிறகு தான் எனது அப்பா மாவட்ட வருவாய் அதிகாரியிடம் பட்டா மாறுதல் செய்து கொடுக்கவில்லை என்று மனு கொடுத்தார் என்றால் சரிதான். அந்த மனுவின் பேரில் 1ம் பிரதிவாதி

பெயரில் இருந்த தாவா சொத்திற்கான பட்டா ரத்து செய்யப்பட்டது என்றால் சரிதான். மாவட்ட வருவாய் அலுவலரின் உத்திரவின் மீது 1, 2 பிரதிவாதிகள் உயர்நீதிமன்றத்தில் மனு செய்து தடை உத்திரவு பெற்றுள்ளார்கள் என்றால் சரிதான். 12.10.2011ல் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு எழுதிக்கொடுத்த இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் பற்றி எங்களுக்கு அப்போதே தெரியும். விபரம் தெரிந்து 3 வருடத்திற்குள் மேற்படி ஆவணத்தை ரத்து செய்ய நானோ, எனது குடும்பத்தினரோ நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான்.எனது தந்தை கொடுத்த வாய்மொழி கிரையத்தின் பேரில் பட்டா மாறுதல் ஏற்பட்டு தாவா சொத்தை இன்று வரை சட்ட காலத்திற்கு மேலாக எங்களுக்கு தெரிய 1, 2 பிரதிவாதிகள் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பொதுவாக ஒரு சொத்தை யார் அனுபவம் செய்கிறார்களோ அவர்கள் பெயரில் தான் வருவாய் துறையில் வரி விதிப்பு ஏற்படும் என்றால் சரிதான். தாவா சொத்தை 1ம் பிரதிவாதிக்கு எனது தந்தை கிரையம் கொடுத்த பின்பு தாவா சொத்தை நாங்கள் அனுபவம் செய்து வருகிறோம் என்பதை காட்டுவதற்கு வரி ரசீது தாக்கல் செய்துள்ளோமா என்றால் தாக்கல் செய்யவில்லை. தாவா சொத்தை நாங்கள் எந்த காலத்திலும் அனுபவம் செய்யவில்லை என்பதால் தான் தாவா சொத்திற்கு எங்கள் பெயரில் வரி விதிப்பு ஏற்படவில்லை என்றால் சரிதான். தாவா சொத்திற்கு 1ம் பிரதிவாதி பெயரில் பட்டா இருந்ததால் தான் 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு 12.10.2011ல் இனாம் செட்டில்மெண்ட் எழுதிக்கொடுத்த விபரம் எங்களுக்கு தெரிந்து சுமார் 12

வருடங்கள் கழித்து தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரிதான். தாவா சொத்து எதிரிடை அனுபவத்தின் அடிப்படையில் 1, 2 பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்டு 1, 2 பிரதிவாதிகளின் அனுபவத்தில் இருந்து வருகிறது என்றால் சரியல்ல. நாங்கள் தாக்கல் செய்துள்ள இந்த வழக்கு காலவரையறை சட்டத்தின்படி பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. தாவா வழக்கை பொறுத்து எங்களுக்கு எந்த பரிகாரமும் சட்டப்படி கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகளிடம் பணம் பறிக்க வேண்டும் என்ற நோக்கத்தில் காலம் கடந்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால் சரியல்ல.

**3ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை:**

தாவா சொத்தை பொறுத்து 12.11.2011ல் இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் ஏற்பட்ட போது எனது தந்தை பெயரில் தாவா சொத்திற்கு வருவாய் துறை ஆவணங்கள் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் சட்டப்படி முன் ஆவணங்களின் அடிப்படையிலும் வருவாய் துறை ஆவணங்களின் அடிப்படையிலும் இனாம் செட்டில்மெண்ட் ஆவணம் பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் என் முன்னால் சாட்சியம் சொல்ல என்னால் கேட்கப்பட்டு தட்டச்சருக்கு கூறி அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது

சார்பு நீதிபதி
மானாமதுரை